முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 216/2024

<u>பி.வா.சா.1 / லட்சுமி /30.07.2026</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1. என்னிடம் காட்டப்படும் ஆதார் அட்டையின் நகல் என்னுடைய தகப்பனாருடையது என்றால் சரிதான், ஆனால் அது முதலில் வழங்கப்பட்டதாகும். **அந்த ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.28 ஆகும்**. இந்த ஆதாரில் எனது தகப்பனாரின் முகவரியாக 2/9 காமட்சியம்மன் வீதி, இடுவாய், திருப்பூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.28 ல் எனது தந்தையின் அலைபேசி எண் 8675927641 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் அந்த எண்ணை பயன்படுத்தி வந்தாரா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.28 ஆவணம் பதிவிறக்கம் செய்யப்பட்ட தேதி 28.02.2017 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அது உண்மையா இல்லையா என்று எனக்கு தெரியாது.

2. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் Details as on 11.08.2025 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் Digitally signed என்ற இடத்தில் வருடம் 2025 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை 2025ம் வருடம் பதிவிறக்கம் செய்து பெறப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ல் உள்ள எனது தந்தையின் அலைபேசி என்னும் வா.சா.ஆ.28 ல் உள்ள எனத தந்தையின் அலைபேசி என்னும் வெவ்வேறு எண்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.28 ல் உள்ள அலைபேசி எண் தான் எனது தந்தையின் அலைபேசி எண் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள அலைபேசி எண் எனது பெயரில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதை எனது தகப்பனாரும் பயன்படுத்தி வந்தார்.

3. எனது ஆதார் அட்டையான பி.வா.சா.ஆ.5 ல் கண்டுள்ள அலைபேசி எண்ணும் பி.வா.சா.ஆ.6 ஆதார் அட்டையில் கண்டுள்ள அலைபேசி எண்ணும் ஒன்றுதான் என்றால் சரிதான். எனது தந்தை பி.வா.சா.ஆ.6 ல் உள்ள அலைபேசி எண்ணை பயன்படுத்தி வந்ததாக சொல்வதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரிதான்.

எழுத்துபூர்வமான ஆவணம் இல்லை. தாவாவில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.3 உயிலில் எனது தந்தையின் அலைபேசி எண் என்று குறிப்பிடப்பட்டுள்ள எண் பி.வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள எண் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் அவரது அலைபேசி எண் என குறிப்பிட்டுள்ள எண். 9524456887 யார் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் எனது கணவர் பயன்படுத்தி வருகிறார் அதனை எனது அப்பாவும் பயன்படுத்தி வந்தார்.

4. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் முகவரியை குறிப்பிட்டுள்ள இடத்தில் Details as on 11.08.2025 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.28 மற்றும் பி.வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள ஆதார் எண் ஒரே எண் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.28 ல் உள்ள அலைபேசி எண் தான் எனது அப்பாவுடையது என்றும், பி.வா.சா.ஆ.6 ல் உள்ள அலைபேசி எண் எனது தந்தை எந்த காலகட்டத்திலும் பயன்படுத்தியது இல்லை என்றும், எனது தகப்பனார் நல்ல மனநிலையில் இல்லாத காரணத்தினால் எனது தகப்பாரின் அலைபேசி எண்ணுக்கு பதிலாக என்னுடைய எண்ணை எனது தகப்பனார் ஆதாரில் மாற்றி எனது தகப்பானாருக்கு உண்டான முகவரியை மாற்றம் எனத தகப்பனாரின் அறிவுக்கு உட்படாமல் நானே தன்னிச்சையாக செய்தேன் என்றும், அதனால் தான் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்னுடைய அலைபேசி எண் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5. எனது மகன் பெயர் தீபக். வாதியின் மகன் பெயர் மகேஷ்குமார் என்றால் சரிதான். மேற்படி மகேஷ்குமார் எனத மகன் தீபக்கிற்கு அலைபேசி Whatsapp மூலம் 18.07.2018 ம் தேதி " Hi Deepak, free to talk need to take appuchi to Neuro Specialist" என்றும் 19.07.2018 ம் தேதியில் " Appointment at 02.30 today MGS Neuro Clinic Karuvampalayam" என்று குறுந்தகவல் அனுப்பிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மகள் பெயர் ரூபா. என் மகளுக்கு நடந்த வளைக்காப்பின் தேதி தெரியுமா என்றால் வருடமும் தேதியும் ஞாபகம் இல்லை. என் மகளின் மகனுக்கு என்ன வயது என்றால் 7 வயது இருக்கும்.

(இருதரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN
Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2026.07.30 17:28:09 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.